# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 1044/2025

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | சூர்யகுமார் |
| Father's Name | : | ராஜவேல்துரை |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.02.2026.

**1 முதல் 3 எதிரிகள் நீதிமன்றக் காவலில் ஆஜர்படுத்தப்பட்டனர்**

**முதல் விசாரணை**

எனக்கு சொந்த ஊர் பழனி ஆகும். நான் தற்போது கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 4ம் வருடம் கல்லூரி விடுதியில் தங்கி படித்து வருகிறேன். சந்தனகுமார் எனது அண்ணன் ஆவார். சுவாசனா

என்னுடன் மருத்துவக்கல்லூரியில் படித்து வருகிறார். கடந்த 20.09.2025ம் தேதி மாலை சுமார் 6.00 மணியளவில் சுவாசனா அவருக்கு கார் ஓட்ட கற்றுக்கொடுப்பதற்காக TN 65 T 0815 Honda City என்ற காரில் கரூர் அரசு காலனி சந்தானகாளிபாளையம் – சங்கரம்பாளையம் செல்லும் சாலையில் கார் ஓட்ட கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தேன். அப்போது இரவு சுமார் 7.30 மணி TN 47 S 8002 என்ற இருசக்கர வாகனத்தில் 25 வயது மதிக்கத்தக்க 3 நபர்கள் வந்தனர். அந்த நபர்கள் ஆஜர் எதிரிகள்தான். அப்போது கருப்பு குண்டாக இருந்த நபர் இங்கே எதற்கடா வந்தீர்கள் என்று கேட்டார். நான் கார் ஓட்ட கற்றுக்கொடுப்பதாக கூறினேன்.

2. மேலும் கேனப்புண்ட என்று கெட்ட வார்த்தையால் திட்டினார். சாட்சி கருப்பு குண்டாக இருந்த நபரை அடையாளம் காட்டினார். அந்த நபர் என்னை கன்னத்தில் அறைந்து 1 பவுன் செயினை பறித்துக் கொண்டார். மற்ற இருநபர்களும் சுவாசனா 1/4 பவுன் வைர தோட்டையும் வைர டாலருடன் கூடிய 1/4 பவுன் செயினையும் மிரட்டி கழற்றி பிடுங்கிக் கொண்டனர். அந்த நபர்கள் மற்ற ஆஜர் இரண்டு எதிரிகள் ஆவர். பின்னர் கல்லை எடுத்து வேறு யாரிடமும் சொன்னால் கொன்றுவிடுவதாக மிரட்டினார். சம்பவம் குறித்து என் நண்பருக்கு தகவல் சொல்லிவிட்டு பின்னர் விடுதிக்கு சென்று விட்டோம். மறுநாள் காலை 7.00 மணியளவில் வெங்கமேடு காவல்நிலையம் சென்று புகாா கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையது. **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

3. அன்றையதினம் எதிரிகளை பிடித்து விட்டதாக போலீசார் சொன்ன தகவலை கேள்விப்பட்டு வெங்கமேடு காவல்நிலையம் சென்று எதிரிகளை அடையாளம் காட்டினேன். அப்போது கருப்பாக குண்டாக இருந்த நபர் மோகன்ராஜ் என்றும் மற்ற 2 நபர்களின் பெயர் சூர்யா, வினோத்குமார் என்று

தெரிந்து கொண்டேன். நகையை அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் போட்டோவிலுள்ள அறுந்த நிலையில் உள்ள செயின் என்னுடையது. தோடு மற்றொரு செயின் அது சுவாசனாவுடையது. என்னிடம் காண்பிக்கப்படும் போட்டோவிலுள்ள இருசக்கர வாகனத்தில்தான் ஆஜர் எதிரிகள் வந்தனர். அந்த **இருசக்கர வாகனம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. செயின் புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை (1, 2 எதிரிகள் தரப்பில்)**</u>

1. புகாரை நான்தான் எழுதினேன். புகாரில் தேதி குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நானும் சுவாசனாவும் அரசு மருத்துவக்கல்லூரியில் தனித்தனி விடுதியில் தங்கி பயின்று வருகிறோம். நாங்கள் இருவரும் காதலர்கள் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் 2 வருடமாக காதலித்து வருகிறோம். மேற்படி TN 65 T 0815 Honda City எனது அண்ணன் பெயரில் உள்ளது. எனக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது. எனது வாகனத்தை எனது விடுதி வளாகத்தில் வழக்கம்போல் நிறுத்தினேன் என்றால் சரிதான். நான் விடுதியிலிருந்து வாகனத்தை வெளியில் எடுத்து சென்றிருந்தாலும் திரும்ப விடுதிக்கு கொண்டு வந்திருந்தாலும் அந்த பதிவுகள் கரூர் அரசு மருத்துவமனையிலுள்ள சிசிடிவி காமிராவில் பதிவாகியிருக்கும் என்றால் சரிதான். நான் சம்பவம் நடைபெற்றதாக தேதியில் நான் எத்தனை மணிக்கு வெளியே சென்றேன் மீண்டும் எத்தனை மணிக்கு விடுதிக்கு வந்தேன் என்ற சிசிடிவி பதிவுகளை நான் போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நான் கார் ஓட்ட கற்றுக்கொடுப்பதற்கு எனது விடுதிக்கு அருகிலேயே இடம் உள்ளது என்றால் சரிதான். எங்கள் கல்லூரிக்கு எதிரில் இருக்கக்கூடிய விளையாட்டு மைதானத்தில் கார் ஓட்டுவதற்கு அனுமதி இருக்கிறதா என்று எனக்கு தெரியாது.

2. திருவள்ளுவர் மைதானம் மற்றும் மாவட்ட விளையாட்டுத்துறைக்கு சொந்தமான மைதானத்தில் கார் ஓட்ட அனுமதி உள்ளதா என்று எனக்கு தெரியாது. நான் சொல்லக்கூடிய சந்தனக்காளிபாளையம் நெரூர் செல்லும் பிரதான சாலை என்றால் சரிதான். மேற்படி சாலையில் அவ்வப்போது வாகன போக்குவரத்து ஆட்கள் நடமாட்டம் உண்டு என்றால் சரிதான். நான் எனது காதலிக்கு நான்கு சக்கர வாகனத்தை காளிபாளையம் – சங்கரபாளையம் மெயின்ரோட்டில் கற்றுக்கொடுத்தேன். மேற்படி இடத்தை குறித்து சொல்லும் அளவிற்கு எந்தவித லேண்டுமார்க்கும் இல்லை என்றால் ஞாபகம் இல்லை. நாங்கள் வாகனம் ஓட்டுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் 2 வாகனங்கள் வந்து போகலாம். நான் கொடுத்த புகாரில் சம்பவம் எங்கு நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சாலையோடு கூடும் மண்ரோட்டில் நடந்தது. சம்பவம் மெயின்ரோட்டில் நடந்தது. சம்பவம் நடந்தபோது நாங்கள் இருவரும் சத்தம் போடவில்லை என்றால் சரிதான்.

3. என்னிடம் செயின் பறித்தபோது எனக்கு காயம் ஏற்படவில்லை, கன்னத்தில் அடித்தார்கள். அது குறித்து நான் எந்த மருத்துவ சிகிச்சையும் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் சம்பவம் குறித்து உடனடியாக காவல் உதவி எண்ணிற்கோ, அருகிலுள்ள காவல் நிலையத்திற்கோ தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் நான் தங்கியிருக்கும் விடுதியின் வாடர்னுக்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவத்திற்கு ஈடுபடுத்தப்பட்டதாக சொல்லப்படும் வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்றும், பின்னால் யார் உட்கார்ந்திருந்தார்கள் என்றால் யார் எங்கிருந்தார்கள் என்று சரியாக ஞாபகமில்லை. வாகனத்தின் பதிவெண்ணில் ஒரு பெயர் எழுதியிருந்தது. அந்த பெயர் எனக்கு தற்போது ஞாபகமில்லை. மேற்படி விவரத்தினை நான் கொடுத்த புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரமானது இருட்டான நேரம் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் குறித்து எனது சகோதரருக்கோ, பெற்றோருக்கோ தகவல் சொல்லவில்லை

என்றால் சரிதான். சுவாஷனாவும் யாருக்கும் தகவல் சொல்லவில்லை.

4. சம்பவம் நடந்த உடனேயே சுமார் 07.40 மணிக்கு எனது நண்பன் நிரஞ்சனுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். உடனடியாக 10 நிமிடத்தில் எனது நண்பர்கள் வந்து விட்டார்கள். நாங்கள் உடனே நண்பர்களுடன் விடுதிக்கு சென்றுவிட்டோம். மறுநாள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றபோது, மேற்படி எனது காதலி சுவாஷனா 08.30 மணிக்குள் விடுதிக்கு செல்ல வேண்டும் என்பதால் புகார் கொடுக்காமல் மறுநாள் காலை 07.00 மணிக்கு புகார் கொடுத்தேன் என்ற விவரத்தை புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகார் கொடுக்க நானும், சுவாஷனா மற்றும் நண்பர்களுடன் காவல் நிலையம் சென்றோம். பட்டியல் சாட்சி நிரஞ்சன், சீனிவாஷ், செங்கோட்டையன் ஆகியோருடன் காவல் நிலையம் சென்றோம். புகார் கொடுக்க சென்றபோது மேற்படி மூன்று பேரையும் போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். புகார் கொடுத்த அன்று மாலை 05.00 மணியளவில் போலிசார் என்னை தொடர்பு கொண்டு எதிரிகளை கைது செய்திருப்பதாகவும் தகவல் சொன்னார்கள். மேற்படி எதிரிகளின் பெயர்களை போலிசார் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு புகார் கொடுத்த அன்று நான் மட்டும் போலிசாருடன் சென்றேன்.

5. மேற்படி சுவாஷனா அணிந்திருந்த நகைகள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது, சுவாஷனா சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். நான் சொல்வது போல மேற்கண்ட எதிரிகள் எந்தவித குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்றாலும், நானும், எனது காதலியும் தகாத உறவில் உள்ளபோது அங்கு வந்த யாரோ நபர்கள் உங்களை தட்டிக் கேட்டதால் அவர்களிடம் வீண் தகராறு செய்துவிட்டு உண்மையை மறைப்பதற்காக மறுநாள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல். உண்மையில் மேற்படி சம்பவம் நடந்திருந்தால் உடனடியாக அருகிலுள்ள காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல.

மேற்படி சம்பவம் குறித்து எனது சகோதரன் மற்றும் பெற்றோர்கள், சுவாஷனாவின் பெற்றோர்களுக்கும் தகவல் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. மேற்படி தகவலை சொல்லியிருந்தால் எங்களுடைய இருவருடைய பெற்றோர்களுக்கும் தெரிந்துவிடும் என்பதால் உண்மையை மறைத்து பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது போலிசார் சொல்லிக் கொடுத்ததைப்போல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. உண்மை சம்பவம் நடந்திருந்தால் நான் விடுதிக்கு செல்லும் வழியிலுள்ள காவல் நிலையத்திலோ அல்லது எங்கள் மருத்துவக் கல்லூரியிலுள்ள புறநகர் காவல் நிலையத்திலோ புகார் கொடுத்திருப்பேன் என்றால் புகார் கொடுப்பதற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஓம்./—எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 1044/2025

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | சுவாசனா |
| Father's Name | : | ராஜ்குமார் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.02.2026.

**1 முதல் 3 எதிரிகள் நீதிமன்றக் காவலில் ஆஜர்படுத்தப்பட்டனர்**

**முதல் விசாரணை**

1. எனக்கு சொந்த ஊர் தருமபுரி ஆகும். நான் தற்போது கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 4ம் வருடம் கல்லூரி விடுதியில் தங்கி படித்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். கடந்த 20.09.2025ம் தேதி எனக்கு கார் ஓட்ட கற்றுக் கொடுப்பதற்காக அ.சா.1 சூர்ய குமார் அவருடைய TN 65 T 0815 HONDA CITY காரில் அழைத்துச் சென்றார். அரசு காலனி பக்கத்தில்

பஞ்சமாதேவி, சந்தனகாளிபாளையம், சங்கராம்பாளையம் செல்லும் சாலையில் கார் ஓட்ட கற்றுக்கொடுத்துக்கொண்டிருந்தார். அப்போது சுமார் 07.30 மணி இருக்கும். அப்போது TN 47 S 8002 என்ற இருசக்கர வாகனத்தில் 25 வயதுள் 3 நபர்கள் வந்தனர். அந்த நபர்கள் ஆஜர் எதிரிகள்தான். எங்களை வழிமறித்து இங்க என்ன பண்றீங்க என்று கேட்டனர். அதற்கு அ.சா.1 சூர்ய குமார் கார் ஓட்ட கற்றுக்கொடுப்பதாக சொன்னார். இங்கு வந்து ஏன் கார் ஓட்ட வந்திங்க என்று கெட்ட வார்த்தையால் திட்டி, கருப்பா குண்டா இருந்த நபர் ஆஜர் எதிரி கன்னத்தில் சூர்ய குமாரை அடித்து அவர் கழுத்தில் அணிந்திருந்த 1 பவுன் தங்க செயினை பிடித்து இழுத்தார். மற்ற இரண்டு நபர்கள் ஆஜர் எதிரிகள் என்னிடம் நான் காதில் அணிந்திருந்த 1/4 வைரக் கல் பதித்த தோடு, வைர டாலர் பதித்த செயின் ஆகியவைகளை பிடுங்கிக் கொண்டனர். கீழே கிடந்த கல்லை எடுத்து இதைப் பற்றி வேறு யாரிடமும் கூறினார் உங்களை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள். இது குறித்து அ.சா.1 தனது நண்பர்களுக்கு தகவல் சொன்னார்.

2. பின்னர், பதட்டத்தில் விடுதிக்கு சென்றுவிட்டோம். மறுநாள் காலை 21.09.2025ம் தேதி காலை 07.00 மணியளவில் வெங்கமேடு காவல் நிலையத்திற்கு அ.சா.1 உடன் சென்றேன். அ.சா.1 புகார் கொடுத்தார். நகையின் மதிப்பு சுமார் ரூ.1,50,000/- இருக்கும். போலிசார் என்னை விசாரித்தனர். அன்றைய தினம் மாலை சுமார் 05.00 மணிக்கு மேல் எங்களிடமிருந்து நகைகளை பறித்தவர்களை கைது செய்துவிட்டதாக போலிசார் சொன்ன தகவலைக் கேள்விபட்டு காவல் நிலையம் சென்றோம். அங்கு ஆஜர் எதிரிகளை அடையாளம் காட்டினோம். அங்கு கருப்பா குண்டா இருந்தவர் பெயர் மோகன்ராஜ் என்றும், என்னிடமிருந்து நகையை பறித்த மற்ற நபர்களின் பெயர் சூர்யா, வினோத் என தெரிந்துகொண்டேன். நகையை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள வைரம் பதித்த 1/4 பவுன் தோடு, வைரம் பதித்த டாலர் செயின் 1/4 பவுன் என்னுடையது. என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள

இருசக்கர வாகனத்தில்தான் ஆஜர் எதிரிகள் வந்து தாக்கினர். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்கு விசாரணை (1, 2 எதிரிகள் தரப்பில்)</u>**

1. சம்பவ நேரம் இருட்டான நேரம் என்றால் சரிதான். மேற்படி வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. சூர்ய குமார் எனது காதலன் ஆவார். 2 வருடமாக காதலித்து வருகிறோம். நான் தருமபுரி மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும், சூர்ய குமார் திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர் என்றாலும் சரிதான். சூர்ய குமாரின் பெற்றோர்கள் மற்றும் சகோதரர்கள் அரசு பணியில் உள்ளவர்கள் என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் மருத்துவராக உள்ளனர் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தபோது வைர தோடு மற்றும் வைரக் கல் பதித்த தங்க செயின் என்றுதான் சொல்லியுள்ளேன். வைரத்தின் அளவோ, தங்கத்தில் அளவோ சொல்லவில்லை. மேற்படி நகைகளுக்குண்டான ரசீதை நானோ, சூர்ய குமாரோ போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில்தான் மேற்படி அ.சா.1 கார் ஓட்டுவதற்காக அழைத்துச் சென்றார். அதற்கு முன்பு கார் ஓட்ட சென்றதில்லை என்றால் சரிதான். பஞ்சமாதேவி, சந்தனகாளிபாளையத்திலிருந்து சங்கரம்பாளையம் செல்லும் வழியில் தார் ரோட்டில் பயிற்சி சுமார் 1 1/2 மணி நேரம் நாங்கள் கார் ஓட்ட பயிற்சி எடுத்துக்கொண்டோம்.

2. கல்லூரிக்கு காலை 08.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை கல்லூரி நேரமாகும். பின்பு நாங்கள் எனது சொந்த வேலையாக வெளியில் சென்றால் இரவு 08.30 மணிக்குள் விடுதிக்கு வந்துவிட வேண்டும் என்றால் சரிதான். மேற்படி நான் வெளியில் சென்றதை எனது விடுதி வாடர்னடிம் சொல்லிவிட்டு, அங்குள்ள நாட்குறிப்பில் எழுதி வைத்துவிட்டு செல்வதுதான்

வழக்கம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நான் அவ்வாறாக எழுதி வைக்கவில்லை. கல்லூரியிலிருந்து நேரடியாக சூர்ய குமாருடன் வெளியில் சென்றுவிட்டேன். எனது விடுதிக்கும், சூர்ய குமார் விடுதிக்கும் இடையே 100 மீட்டர் தொலைவு இருக்கும். மேற்படி வாகனம் சூர்ய குமார் விடுதியில் இருந்தது. மேற்படி எனது விடுதியிலும், சூர்ய குமார் விடுதியிலும் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான். மேற்படி சிசிடிவி பதிவுகளை பார்த்தால் மேற்கண்ட விவரங்கள் தெரிய வரும் என்றால் சரிதான்.

3. மேற்படி சம்பவம் குறித்து நான் உடனடியாக அருகிலுள்ள காவல் நிலையத்திற்கோ, காவல் உதவி எண் 100 க்கோ தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி என்னுடன் பயிலும் தோழிகளிடம் மேற்படி சம்பவத்தை நான் உடனடியாக சொல்லவில்லை. எனது விடுதி காப்பாளாரிடமும் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி எனது பெற்றோர்களுக்கும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்று சுமார் 08.00 மணியளவில் சூர்ய குமாரின் நண்பர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். அவர்களும் காவல் நிலையத்திற்கு செல்ல எந்தவித அறிவுரையும் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் செல்லும் வழியில்தான் பசுபதிபாளையம் காவல் நிலையம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் கல்வி பயிலும் மருத்துவ கல்லூரியில் புறக் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். அங்கும் நான் எந்த புகாரும் தரவில்லை. பொதுவாக குற்ற சம்பவம் நடந்தால் உடனே காவல் நிலையத்திலோ, அல்லது வேறொரு காவல் நிலையத்திலோ சென்று புகார் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான்.

4. நான் பின்னிட்டு விடுதிக்கு வந்தவுடன் எனது நகையை பறித்தது தொடர்பாக ஆன்லைனில் எந்த ஒரு புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி எதிரிகள் பெயர்களை போலிசார் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவத்தின்போது எதிரிகள் அணிந்திருந்த

உடைகள் குறித்து நானோ, அ.சா.1 எந்த விவரங்களையும் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி பறித்ததாக சொல்லப்படும் நகைகளை எனது பெற்றோரிடம் தொலைந்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின்னிட்டும் இதுநாள் வரை எனது பெற்றோர்களிடம் மேற்படி சம்பவம் குறித்து நான் சொல்லவில்லை. நானும், அ.சா.1 ம் காதலர்கள் என்பதால் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் வேறு நபர்களால் நடந்த பிரச்சணையில் நானும், எனது காதலனும் தணிமையில் இருந்ததை தட்டிக் கேட்ட நபர்கள் மீது புகார் கொடுத்திருந்தோம் என்றும், மேற்படி எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல. போலிசார் போட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./—எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**